**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025 ம் ஆண்டு நவம்பர் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 2/2021**

1.வியாகுலமேரி
2.கிளாராபுஷ்பம்
3.ஜஸ்டின் ஆரோக்கிய செல்வி
4.லீமாரோஸ் ..... மனுதாரர்கள்/3,4,6,7 பிரதிவாதிகள்

**/ எதிர் /**

1.செபஸ்தியம்மாள் ..... எதிர்மனுதாரர்/வாதி
2.பார்வர் அம்மாள்
3.ஜெபமாலை
4.ஜோஸ்பின் சகாயரூபி
5.சார்லஸ்
6.மெர்சி
7.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
8.வட்டாட்சியர், மானாமதுரை
9.சார்பதிவாளர், மானாமதுரை ..... எதிர்மனுதாரர்கள் / 1, 2, 5, 8 முதல் 12 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 10.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பசுமலை அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. மனுதாரர்கள்/3,4,6,7 பிரதிவாதிகள் தரப்பில் CPC Order 8 Rule 9 மற்றும் பிரிவு 151ன் படி அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

மேற்படி அசல் வழக்கு வாதி தரப்பு Further Evidence–க்காக உள்ள நிலையில், தாவா சொத்தின் தங்களது பாகபாத்தியத்தை பொறுத்தும் 1 முதல் 4 இலக்க சொத்துக்கள் தங்களுக்கு பாத்தியப்பட்டவை பொறுத்தும், மேற்படி வழக்கில் சாமிநாதபிள்ளையின் உடன்பிறந்த வாரிசுகளை சேர்க்காததை குறித்தும், செல்வநாயகம் அம்மாளின் வாரிசுகளை சேர்க்காததை குறித்தும், கடந்த 21.09.2020ம் தேதிய ஆவணத்தினை எழுதி வாங்கியதாக வாதி கூறும் நிலையில், 2ம் பிரதிவாதி மகன் டொமிக்ராஜ் என்பவரை இவ்வழக்கில் சேர்க்காதது குறித்தும், மேலும் 8ம் பிரதிவாதியின் பெயர் தவறுதலாக உள்ளது குறித்தும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமத்தை மன்னித்து இம்மனுவை அனுமதியளித்து உத்தரவிட வேண்டுமென்று என்று மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

மனுவில் குறிப்பிட்டுள்ள விசயங்கள் உண்மைக்கு மாறானவை என்றும், 8ம் பிரதிவாதியே நீதிமன்றத்தில் ஆஜராகி PW2 ஆக சாட்சியம் அளித்த போது குறிப்பிடாதநிலையில் தாவா மனுவில் பெயர் தவறு என்று குறிப்பிட்டிருப்பதை ஆட்சேபிப்பதாகவும், மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் விசயங்கள் இருக்குமானால் விசாரணைக்கு முன்பாகவே உடனடியாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தற்போது காலம் கடந்தது வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்து 4 ஆண்டுகள் கடந்த பிறகு தாவா மனுவை தாக்கல் செய்துள்ளது தள்ளுபடிக்குரியது என்றும், தாவா வழக்கு விசாரணையை தொடர்ந்து காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே தாவா மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>**இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும்:-**</u>

**4.1.** இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி வா.சா.1–செபஸ்தியம்மாளை, 3, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

...."2ம் பிரதிவாதி ஜெபமாலை அவரது உடன்பிறந்த சகோதரிகளுடன் நன்றாக பேசுவேன். அந்தோணிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உரிமையில்லாத 2ம் பிரதிவாதி ஜெபமாலை தனது மகன் டொமிக்ராஜ் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்ற அடிப்படையில் 21.09.2020ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டியது எனில் சரிதான் என்றும்,

2ம் பிரதிவாதி ஜெபமாலை அவரது மகன் டொமிக்ராஜ் ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் மீதான பாக அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் தங்களுக்குரிய பாகத்தினை 5, 6, 7 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து மேற்படி 3, 4 பிரதிவாதிகளுக்கு 18.11.2020ம் தேதி பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் எனில் அதுபற்றி எனக்கு தெரியாது".... என்றும் தெரிவித்துள்ளார்.

**4.2.** அதனடிப்படையில் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் சேர்க்கப்படவில்லையா என்பது போன்ற விசயங்கள் மனுதாரர்கள் தரப்பு மனு அனுமதிக்கப்பட்டு, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கை விசாரணை செய்து உண்மை நிலையை தீர்மானிக்க முடியும் என்பதாலும், மேலும் வழக்குகள் பெருகுவதை **(For Avoiding Multiplicity of Proceedings)** தடுப்பதற்காகவும், நீதியின் நலன்கருதி இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 நவம்பர் 14 நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.14 04:41:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.14 04:41:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No.3/2025**

**in**

**OS.No.2/2021**

**Order**

**Dated 14.11.2025**